முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்
O.S. No. 625/2023

<u>பி.வா.சா.2 / பழனிசாமி /27.01.2026</u>

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் தவிர வழக்கு விவரங்கள் பற்றி வேறு ஏதாவது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் போர்வெல்ஸ் தொழில் மற்றும் விவசாயம் செய்கிறேன். என் பெயரில் கல்யாண மண்டபம் இருக்கிறதா என்றால் இருக்கிறது. வாதிகள் முனியப்பன் மற்றும் ஈஸ்வரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் 24.11.2011ம் தேதி பத்திர எழுத்தர் யுவராஜ் அலுவலகத்தில் வைத்து அவர்களை முதன்முறையாக சந்தித்தேன். அதில் இருந்து அவர்களை எனக்கு தெரியும். எனக்கு பூர்விகம் காட்டுப்பாளையம் ஆகும். குன்னத்தூரில் கடந்த 50 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். 1ம் வாதி முனியப்பனின் மூத்த சகோதரர் முருகனை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி பெரியசாமிக்கும் எனக்கும் எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்று கேட்டால் சுமார் 40 ஆண்டுகளாக பழக்கம் உண்டு. 1ம் பிரதிவாதி கூட்டுறவு சங்கத்தில் தலைவராக இருந்தாரா என்றால் ஆமாம். மேலும் அவர் சக்தி பைனான்ஸ் என்ற பெயரில் தொழிலும் செய்து வந்தார். பைனான்ஸ் தொழிலில் 1ம் பிரதிவாதி நிலத்தை அடமானத்தின் பேரில் கடன் கொடுத்து பைனான்ஸ் செய்து வந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பத்திர எழுத்தாளர் யுவராஜின் அலுவலகம் எங்குள்ளது என்று கேட்டால் குன்னத்தூரில் உள்ள பழைய சார்பதிவாளர் அலுவலகத்தின் அருகில் உள்ளது. எனது பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி பத்திர எழுத்தாளர் அலுவலகத்தில் பத்திர எழுத்தர் யுவராஜ், 1ம் பிரதிவாதி பெரியசாமி, 1ம் வாதி முனியப்பன், 2ம் வாதி ஈஸ்வரி மற்றும் ஒரு நபர் இருந்ததாக சொல்லியுள்ளது சரிதான். நானும் உடனிருந்தேன். பி.வா.சா.ஆ.2 வர்த்தமான கடிதம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதா அல்லது தட்டச்சு இயந்திரத்தில் தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் அதனை தயார் செய்து எடுத்து வந்தார்கள். எல்லோரிடம் படித்து காண்பிக்கப்பட்டது. ஆனால், அது என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்படவில்லை. அந்த ஆவணத்தை நான் வாங்கி படித்து பார்க்கவில்லை. அதில் நான் கையொப்பம் செய்யும் போதாவது படித்து பார்த்தேனா என்றால் 15 வருடங்கள் ஆகிவிட்டதால் தற்போது ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ.2 வர்த்தமான கடிதத்தில் சில

வாசகங்கள் கைப்பட எழுதப்பட்டுள்ளது அதை யார் எழுதினார்கள் என்று கேட்டால் ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ.2 வர்த்தமான கடிதத்தில் சாட்சிகளின் விவரங்களை பத்திர எழுத்தாளர் யுவராஜ் தான் கைப்பட எழுதினார். 1ம் பிரதிவாதி பெரியசாமி என்னிடம் எப்போது அவர் பவர் வாங்கினார், யாருக்கு எப்போது அதில் கண்டுள்ள சொத்தை விற்றார் போன்ற விவரங்கள் என்னிடம் தெரிவித்தாரா என்றால் இல்லை. நானும் அதை பற்றி கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. கையொப்பம் செய்ய கேட்டார்கள் நானும் செய்து கொடுத்தேன். நான் சொல்வது போல் 24.11.2011ம் தேதி பி.வா.சா.ஆ.2 வர்த்தமான கடித்ததில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றும் 2007ம் வருடமே அதில் சாட்சி கையொப்பம் செய்திருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் மருமகளான 2ம் பிரதிவாதி சவிதாவை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து சம்மந்தமாக 1ம் பிரதிவாதி பெரியசாமிக்கும் 1ம் வாதி முனியப்பனின் சகோதரர் முருகனுக்கும் இடையே காவல் நிலையத்தில் பல புகார்கள் கொடுக்கப்பட்டு நிலுவையில் இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.2 வர்த்தமான கடிதம் தயாரிப்பதற்கு முன்பாக அதில் சம்மந்தப்பட்ட தாவா சொத்து எங்கு அமைந்துள்ளது என்ற விவரம் அப்போது எனக்கு தெரிவிக்கப்பட்டதா என்றால் தெரிவிக்கப்பட்டது. நான் சொல்வது போல் 24.11.2011ம் தேதி பி.வா.சா.ஆ.2 வர்த்தமான கடிதம் தயாரிக்கப்படவில்லை என்றும் நான் அதற்கு முரண்பாடாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதுபோல் பி.வா.சா.ஆ.2 ஏற்பட்டதாக சொல்லப்படும் தேதியில் 1ம் பிரதிவாதி பெரியசாமி வாதிகளுக்கு எந்த தொகையும் கொடுக்கவும் இல்லை அவர்கள் வாங்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> : இல்லை.**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2026.01.27 20:02:08 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.